# NSW HEALTH

## COVID-19 Key Points – Monday 23 August 2021

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 818 கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர். கவலைக்கிடமாக, 80 வயதுப்பிரிவைச்சேர்ந்த மூன்று நபர்கள், கடந்த இரவில் உயிரிழந்துள்ளனர்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன்வந்த உங்கள் அனைவருக்கும் நன்றி: கடந்த வாரம், ஒரு மிகக்கூடிய பதிவாக 738,000 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது. நாங்கள் இப்போது 5.9 மில்லியன் தடுப்பூசிகளை எட்டியுள்ளோம். அஸ்ட்ரா செனீக்கா (AstraZeneca) மற்றும் ஃபைசர் (Pfizer) ஆகிய இரண்டுமே சிறந்த தடுப்பூசிகள்தான். நீங்கள் இன்னும் உங்களுடைய தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளவில்லை என்றால், தயவுசெய்து nsw.gov.au-இல் அவசரமாகப் பதிவு செய்துகொள்ளுங்கள்.
- நாம் 70% மற்றும் 80% ஆன தடுப்பூசி விகிதங்களை எட்டும்போது, எமது வாழ்க்கையை இன்னும் சுதந்திரமாக வாழ ஆரம்பிக்கலாம். தடுப்பூசியை வழங்குவதில் நியூ சவுத் வேல்ஸ் மிகவும் சிறப்பாக செயற்படுகிறது, அத்துடன் எங்கள் இலக்குகளை எட்டுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. இதில் நாம் அனைவரும் ஒன்றாக உள்ளோம், அத்துடன் இதைக் கடந்து செல்ல எங்களிடம் ஒரு திட்டம் உள்ளது.
- நீங்கள் 16-39 வயதிற்குட்பட்டவராகவும், கவலைக்கிடமான புறநகர்ப்பகுதியில் வசிப்பவராகவும் இருந்தால், உங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. முன்பதிவு செய்ய, தயவுசெய்து இங்கே செல்லவும்: Priority COVID-19 vaccination booking for 16 to 39 year-olds | NSW Government
- பரந்த மேற்கு சிட்னி (Greater Western Sydney) மற்றும் தென்மேற்கு சிட்னி (Southwest Sydney) ஆகிய பகுதிகள், இன்னும் அதிகூடிய நோய்த்தொற்றாளர்களைக் கொண்டுள்ளன. மெரிலேண்ட்ஸ் (Merrylands), கில்ட்ஃபோர்ட் (Guildford), ஓபர்ன் (Auburn), கிரேஸ்டேன்ஸ் (Greystanes), கிரீனேக்கர் (Greenacre), பாங்க்ஸ்டவுன் (Bankstown), பிளாக்டவுன் (Blacktown) மற்றும் இவற்றைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகள், மிகவும் கவலைக்கிடமான பகுதிகளாக உள்ளன. உங்கள் பகுதியில் உள்ள பொதுமுடக்க விதிமுறைகளை (lockdown rules) நீங்கள் அறிந்துவைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- நேற்று, சுமார் 160,000 பரிசோதனைகள் செய்யப்பட்டன. உங்களுக்கு இலேசான அறிகுறிகள் இருந்தாலோ, அல்லது நோய்த்தொற்றாளர் ஒருவருடன் நீங்கள் தொடர்புபட்டு இருந்திருந்தாலோ, தயவுசெய்து தொடர்ந்தும் பரிசோதனையைச் செய்துகொள்ள முன் வாருங்கள்.

Translated By WSLHD Translation Service, 23 August 2021
Tamil